

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக, மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிக்கு சிறப்பு சக்கர நாற்காலி மற்றும் மூன்று சக்கரவண்டிகளை மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் இன்று (18.07.2016) வழங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ்.இளங்கோ உடனுள்ளார்.

செ.வெ.எண்: 456/2016 நாள்: 18.07.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், பொது மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், 21 பயனாளிகளுக்கு ரூ. ஒரு இலட்சத்து 18 ஆயிரத்திற்க்கான உதவி உபகாரணங்களை இன்று (18.07.2016) வழங்கினார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், பொது மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக லூயி பிரெயிலி கூட்டரங்கில் இன்று (18.07.2016) நடைபெற்றது.

திங்கட்கிழமை தோறும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறும் பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு குறைகள் தீர்க்க நடவடிக்கை மேற்கொள்வதுடன், நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் மாற்றுத்திறனாளி நலத்துறை சார்பாக, மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்ட ஒரு மாற்றுத்திறனாளிக்கு ரூ. 6,400/- மதிப்பிலான மூன்று சக்கர வண்டியும், 20 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ. 5,580/- மதிப்பிலான சிறப்பு சக்கர நாற்காலிகள் என மொத்தம் 21 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1,18,000/-க்கான (ஒரு இலட்சத்து பதினெட்டாயிரம்) உதவி உபகாரணங்களை மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் இன்று (18.07.2016) வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ். இளங்கோ, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு. எம். சந்திரன், மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு. பிரம்மநாயகம் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.